# பொது அறிவிப்பு

*சென்னை, பழைய கதவு எண். 61, புதிய கதவு எண். 34, சர் தியாகராய சாலை, பாண்டி பஜார், தி.நகர், சென்னை – 17 ல் உள்ள அனுமதியற்ற மற்றும் விதிமீறி கட்டப்பட்ட 4வது மாடியிலிருந்து 8வது மாடி + 9 வது தளப்பகுதி + 10 தளப்பகுதிகளான கட்டிடத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன் கீழ் பூட்டி சீல் வைப்பதற்கான தாக்கீது வழங்கி அதன் தொடர்ச்சியாக 24.10.2019 -ல் பூட்டி சீல் வைத்தது. இக்கட்டிடத்தின் உரிமையாளர் M/s. ஜனப்பிரியா பில்டர் அவர்கள் தொடர்ந்த வழக்கில் ரிட் மனு எண்.W.P.No. 17011/2024 -ல் மேதகு உயர்நீதிமன்றம் ஆணை நாள் 10.02.2025-ல் அனுமதியற்ற மற்றும் விதிமீறி கட்டப்பட்ட 4வது மாடியிலிருந்து 8வது மாடி + 9 வது தளப்பகுதி + 10 தளப்பகுதிகளான மற்றும் தரைத்தளத்தில் பக்க இடைவெளியில் உள்ள கடையையும் அகற்ற ஆணையிட்டுள்ளது. இவ்உயர்நீதி மன்றத்தின் ஆணையை நிறைவேற்றும் பொருட்டு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் இக்கட்டிடத்தின் உரிமையாளரான M/s. ஜனப்பிரியா பில்டருக்கும் மற்றும் பக்க இடைவெளியில் கடை கட்டியுள்ள திரு. பாவா என்கிற வாடகைதாருக்கும் தெரியபடுத்தி கட்டிடத்தை இடிக்க ஏதுவாக இக்கடைகளை காலி செய்ய ஒரு கடிதத்தை 06.03.2025 -ல் அனுப்பப்பட்டது. ஆனால் அக்கடிதத்தை பெற்றுக்கொள்ள அக்கடிதத்தின் உரிமையாளரும் மற்றும் வாடகைதாரரும் அவர்களது முகவரியில் இல்லை. எனவே விவரத்தை தெரிவிப்பதற்காக அக்கடிதம் நாள் 06.03.2025 கட்டிடத்தின் சுவற்றில் ஒட்டப்பட்டது. ஆதலால் உயர்நீதிமன்ற ஆணைப்படி இக்கட்டிடத்தை அகற்றுவதற்கு ஏதுவாக மேலே குறிப்பிட்டுள்ள உரிமையாரும் மற்றும் வாடகைதாரரும் அவர்கள் கட்டிடத்திலுள்ள பொருட்களை எடுத்து கொள்ளும் பொருட்டு 7 நாட்களுக்குள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தை அணுகுமாறு இப்பொது அறிவிப்பின் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

**உறுப்பினர் செயலர்**
**அவர்கள் உத்தரவின்படி**
**சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்**
**சென்னை- *600 008.***